தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நந்தன, பங்குனி 13, திருவள்ளுவர் ஆண்டு–2044

2013 மார்ச் 26, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் வுலகு."

எளிய மக்களிடம் இனிமையாகப் பேசி தேவையானதைக் கொடுத்து உதவி செய்யும் ஆட்சியாளருக்குப் புகழ் தானாக வந்து சேரும். அவர் விருப்பம்போல் குடிமக்களும் அமைவார்கள்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

61—

மின் உற்பத்தி

***8491—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பர்கூர் மலைப் பகுதியில் மணியாச்சி திட்டத்தின்மூலம் மின் உற்பத்தி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[2013 மார்ச் 26

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஈரோடு மாவட்டம், பர்கூர் மலைப் பகுதியில் மணியாறுஹல்லா நீரோடைமூலம் மின் உற்பத்தி செய்ய புலனாய்வுப் பணிகள் மேற்கொண்டதில் தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மின் உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே உள்ளன. ஆகவே, இத்திட்டம் தற்போது எடுத்துக்கொள்ளப்பட இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி கண்ட கற்பக விருட்சம், எங்கள் தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது பணிவான வணக்கத்தை சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள பர்கூர் மலைப் பகுதியானது 30 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இங்கே சுமார் 15,000–க்கும் மேற்பட்ட மலைவாழ் மற்றும் பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் அனைவரும் விவசாயத்தையே நம்பியிருக்கின்றனர். பெரும்பாலான விவசாயக் கிணறுகளுக்கு மின் இணைப்பே இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்றனர். மேலும், இப்பகுதிக்கு 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அந்தியூரிலிருந்துதான் மின்சாரம் செல்கிறது. வனப் பகுதிகளின் வழியாக மின் கம்பிகள் செல்வதால், பல நேரங்களில் வன விலங்குகள் மின் கம்பங்களைச் சேதப்படுத்தி விடுகின்றன. அடர்ந்த வனப் பகுதியில் மின் கம்பங்கள் சேதப்படுத்தப்படுகின்ற நேர்வில் உடனடியாக சரி செய்ய முடியாத காரணத்தினால், இப்பகுதி மக்கள் 10 தினங்களுக்கு மேலும்கூட மின்சாரம் இல்லாமல் தவிக்கின்ற சூழ்நிலை உள்ளது. இப்பகுதியிலுள்ள மணியாச்சிப்பள்ளம் என்ற காட்டாற்று ஓடையில் வருடம் முழுவதும் நீர்வரத்து உள்ளது. தமிழ்நாட்டை மின் மிகை மாநிலமாக உருவாக்கப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி

2013 மார்ச் 26]

அம்மா அவர்களின் அரசு இந்த மலைவாழ் கிராமங்கள் பயன்பெறும் வகையில் மின் உற்பத்தித் திட்டத்தை உருவாக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணீதரன் அவர்கள் கேட்டுக்கொண்டதைப்போல அவருடைய தொகுதியிலே அந்தப் பணிகளுக்காக ஆய்வு மேற்கொண்டபோது மின் உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் மிகக் குறைவாகவே உள்ளன என்பது தெரிய வந்தது. காரணம், மணியாறுஹல்லா நீரோடைப் பகுதியில் 0.75 மெகா வாட் அளவிற்குத்தான் மின் உற்பத்தி செய்யமுடியும். 1 மெகா வாட் மின்சாரம்கூட கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. 0.75 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்ய முடியும் என்றாலும், அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களுக்குத்தான் அந்த மின்சாரம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆண்டு முழுவதும் மின்சாரம் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. 0.75 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்வதற்கே ஏறத்தாழ ரூ.20 கோடிக்குமேல் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே பொருளாதார ரீதியாகவும், இது சாத்தியம் இல்லை.

மேலும், இப்பகுதி பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிக்கு உட்பட்ட பகுதியில் இருப்பதால், மத்திய அரசின் வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அனுமதி பெற்று, 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு பாதுகாக்கப்பட்ட அடர்ந்த வனப் பகுதியில் சாலை அமைக்கப்பட வேண்டியிருக்கிறது. இதற்கு வனத் துறைச் சட்டத்தின் அடிப்படையில் மத்திய அரசின் அனுமதி கிடைப்பதிலும் சட்டச் சிக்கல் இருக்கிறது. ஆகவே, சட்ட விதிகளின்படியும், பொருளாதார ரீதியின்படியும், நடைமுறைகளின்படியும் அது சாத்தியம் இல்லாமல் இருப்பதால்தான், இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஓரளவிற்கு சாத்தியக்கூறு இருக்கிற இடங்களாக இருந்தால், வாய்ப்பு இருக்கின்ற அத்துணை இடங்களிலும் நாம் மின் உற்பத்தி செய்யவேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய

அரசின் கொள்கை. இருந்தாலும்கூட, இதிலே வாய்ப்பு இல்லை என்பதால்தான் இத்திட்டம் மறுபரிசீலனை செய்ய முடியாத நிலையிலிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

பிற வசதிகளைப்பற்றி இங்கே சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பகுதியின் மின் தேவையைக் கணக்கிலே கொண்டு, மின் விநியோகத்தைச் சீரமைத்து, தடையில்லாத மின்சாரம் வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு படிப்படியாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்குத் தடையில்லாமல் மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவித்தமைக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கூடலூரில் 110 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நான்கு ஆண்டுகளாகியும் இதுவரையிலும் பணி முடிக்கப்படாமலிருக்கிறது. இதனால் அப்பகுதியிலுள்ள பள்ளி மாணவர்கள் படிப்பதற்குக்கூட மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனது தொகுதிக்குட்பட்ட கூடலூரில் 110 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கு கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருந்த பணிகள் தற்பொழுது நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி, கேள்வியைக் கேளுங்கள்.

2013 மார்ச் 26]

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பணியை மீண்டும் துவங்கி விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் 110 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கு கருத்துரு பெறப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பணியில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது; தொய்வு ஏற்பட்டிருக்கிறது; தொடர்ந்து பணிகள் நடைபெறவில்லை என்றும் குறிப்பிடுகிறார். அதிலே என்னென்ன இடையூறுகள் இருக்கின்றன என்பதை உடனடியாகக் கண்டறிந்து, அவற்றை நீக்கி, அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

62—

பேருந்து நிலையம்

***6512—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?